**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3964/ஆ5/2023, நாள்.20.09.2023**

•••••

பொருள்	பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம், பரப்பரப்பான நேரத்தில் போக்குவரத்தை சீரமைக்கவும், விபத்துகளை குறைக்கவும், வாகனங்கள் தடையின்றி செல்லவும் அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வரும் NSS / NCC / RSP தன்னார்வலர்கள் / மாணவர்களுக்கு பயிற்சி அளித்தல் – தொடர்பாக

பார்வை	வேலூர் மாவட்டம், கூடுதல் காவல் கண்காணிப்பாளரின் கடித நாள். 11.09.2023 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள். 19.09.2023)

•••••

பார்வையில் காணும் வேலூர் மாவட்டம், கூடுதல் காவல் கண்காணிப்பாளரின் கடிதத்தில் பரப்பரப்பான நேரத்தில் போக்குவரத்தை சீரமைக்கவும், விபத்துகளை குறைக்கவும், வாகனங்கள் தடையின்றி செல்லவும், பள்ளிகளில் செயல்பட்டு வரும் NSS / NCC / RSP மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு 21.09.2023 முதல் 27.09.2023 வரை வேலூர் மாவட்டம் நேதாஜி விளையாட்டு மைதானத்தில் காலை 8.00 மணி முதல் 9.00 வரை (ஒரு மணி நேரம்) நடைபெறவிருக்கும் பயிற்சியில் கலந்துக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பயிற்சிக்கு காலை 7.30 மணிக்கு தவறாமல் வருகை புரியுமாறும், 28.09.2023 அன்று மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களின் தலைமையில் நேதாஜி விளையாட்டு மைதானத்தில் தொடக்க விழா நடைபெறும் என தெவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வரும் NSS / NCC / RSP மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மேற்காணும் படி குறிப்பிட்டுள்ள நாட்களில் குறித்த நேரத்தில் பயிற்சியில் கலந்துக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு / அரசு நிதியுதவிபெறும் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர்**
தலைமை ஆசிரியர்,
அரசு / அரசு நிதியுதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்
**நகல்**
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
வேலூர் மாவட்டம்,
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)